
நடிவுரைகு கடலூர் மாவட்டம் கடலூர் வட்டம் கடலூர் ஊராட்சி ஒன்றியம்
நகரமைப்பிரிவு ஊராட்சியில் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின்
நிர்மான எண்: 1/2023 நாள் 28-12-2023 மேற்படி நகரமைப்பிரிவு
ஊராட்சி எல்லைக்குள் ச/ப சர்வே எண்: 178/1B2B, 178/4B1
ச/படங்கிய 2.35 ஏக்கர் நிலத்தில் அமைந்த 34 - மனைகள் கொண்ட மனைப்பிரிவு
என்னும் பெயருடன் நகரமைப்பிரிவு ஊராட்சியில் வரைபடம்
ஒப்புதல் அடிப்படையில் வழங்கப்படுகிறது.



நகர் ஊரமைப்புத்துறை

மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்

கடலூர் மாவட்டம்

உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு தொழிற்நுட்ப ஒப்புதல் வரைபடம்

மாவட்டம்	-	கடலூர்
வட்டம்	-	கடலூர்
ஊராட்சி	-	கடலூர் ஊராட்சி ஒன்றியம்
கிராமம்	-	நடுவீரப்பட்டு
சர்வே எண்	-	178/1B2B, 178/4B1
கோப்பு எண்.	-	C8MEHZ2T/TCP/2023
அளவு	-	1 அங்குலம் = 32 அடி (1:400)
மனைப்பிரிவு இடத்தின் பரப்பு	-	2.35 ஏக்கர் / 9532.00 ச.மீ

வ

குறிப்பு

கோரிய மொத்த மனைகள்	-	34 மனைகள்
ஒதுக்கிய மனைகள்	-	32 மனைகள்
பூங்கா	-	அரசு வழிகாட்டி மதிப்பின் படி பணம் செலுத்தப்பட்டுள்ளது.

உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்படவேண்டிய பகுதி

பொது உபயோக ஒதுக்கீடு

A. உள்ளாட்சிக்கு பரப்பு	-	45.76 ச.மீ	0.69%
B. மின்சார துறை பரப்பு	-	44.63 ச.மீ	0.68%
உத்தேச சாலை	-	2939.57 ச.மீ	
மனைப்பிரிவு எல்லை	-		
நிலையில் உள்ள சாலை	-		
கட்டிட வரம்பு	7.2மீ முதல் 12.0மீ வரை சாலைகளுக்கு	-	1.50மீ
முலை முடக்கு	7.2மீ முதல் 12.0மீ வரை சாலைகளுக்கு	-	1.50மீ x 1.50 மீ

நிபந்தனைகள்:

1. இம்மனைப்பிரிவுக்கு மாநகராட்சியில் இறுதி ஒப்புதல் வழங்கும் முன் இடம் எந்த நில ஆர்ஜிதம் செய்யப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதபட்டியல் மாவட்டவருவாய்த்துறை அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
2. அரசாணை எண்.134,ந.நி.(ம) கு.நி.வ.துறை நாள். 20.09.2002-ன் படி பூங்கா (ம) சாலை ஒதுக்கீடுகளை உள்ளாட்சியே தானமாக பெற்றுக்கொண்டு பராமரிக்க வேண்டும் என்றும், நில உரிமம் குறித்து உள்ளாட்சியே முழுப்பொறுப்பு என்றும் தெரிவிக்கப்படுகிறது.
3. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் (ம) பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் (அ) மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் ரத்து செய்யப்படும்.
4. இவ்வலுவலகத்தால் தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்படும் மனைப்பிரிவு மனைகள் வாங்கும் ஒவ்வொரு மனுதாரருக்கும் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபட நகல் வழங்கப்பட வேண்டும்.
5. இவ்வலுவலகத்தால் தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்படும் மனைப்பிரிவு வரைபடத்தினை பொதுமக்கள் பார்வைக்காக சம்மந்தப்பட்ட இடத்தில் 6'0" x 4'0" என்ற அளவுக்கு குறையாமல் காங்கீட் பலகையில் வரைந்து வைக்கப்பட வேண்டும்.
6. உத்தேச மனையிடத்தின் ஊடே செல்லும் தாழ்வு மின் அழுத்தக் கம்பிப்பாதையினை (LT LINE) மனைப்பிரிவில் அமையும் சாலையின் போக்கிலேயே மாற்றியமைக்கப்படவேண்டும்.
7. பிரஸ்தாப மனைப்பிரிவில் நீர்நிலைகள் ஏதும் இல்லை என மனுதாரரிடமிருந்து பெறப்பட்ட உறுதிமொழியின் அடிப்படையில் ஒப்புதல் வழங்கப்படுகிறது.

சிறப்பு நிபந்தனை:

நகர் ஊரமைப்புத்துறை சட்ட ரீதியாக தொழில் நுட்ப அனுமதி (ம) திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிபடுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி (அ) திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில்(கிரையப்பத்திரம், சுத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல)விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிபடுத்திக்கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத்துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

ம.வ/ந.ள.உ_.இ.(க.மா)எண் :133/2023

உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
கடலூர் மாவட்டம்

A. Santhoshom
தலைவர்
நடுவீரப்பட்டு ஊராட்சி.
கடலூர் ஒன்றியம்.

அளவர்/உதவி வரைவாளர்

ஆய்வாளர் நிலை - 3

Signature valid
Signed by: Assistant Director
Location:Cuddalore
Date:2023.11.27 14:12:07

மேற்பார்வையாளர்/வரைவாளர் நிலை - 2